6. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(இ) 1983-84 ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியக் கோரிக்கைகள் (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1983-84 ஆம் ஆண்டு கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளை பேரவையில் முன் மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடருமிந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றிருக்கிறது.

Message :

"I, Sundarlal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further grants for the year 1983-84".

பொது விவாதம் பிற்பகல் 1.00 மணிக்கு முடிவடைந்து மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

8. இறுதித் துணை நிதி அறிக்கை, 1983-84, பொது விவாதமும் வாக்கெடுப்பும்.

திரு. எல். இளையபெருமாள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற 1983-84 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகள் சம்பந்தமாக நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துகளை சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே 1,130·10 கோடிக்கு அதிகமாக தேவைப்படுகிறது என்று அவர்களுடைய உரையில் சொல்லி இருக்கிறார்கள். இதில் வருவாய் கணக்கில் ரூ. 220-24 கோடியும், மூலதன, கடன் கணக்கில் ரூ. 909·86 கோடியும், வெள்ள துயர் துடைப்புப் பணிகளுக்காக ரூ. 37·54 கோடியும், அதற்கு மேல் 7·64 கோடி ரூபாயும், பாலங்களைப் பழுது பார்ப்பதற்காக ரூ. 13·60 கோடியும், பாசன வாயில்களைப் பழுது பார்ப்பதற்காக முன்பு ஒதுக்கிய தொகையை விட அதிகமாக 8 கோடி ரூபாயும், கல்விக்காக ரூ. 6·19 கோடியும், தேவைப்படுகிறது என்று கோரி இருக்கிறார்கள். இதில் நான் சொல்ல விரும்புவது கல்விக்காக அமைச்சர் அவர்கள் கோரி இருக்கிற தொகையை விட இன்னும் அதிகமான தொகையை அவர்கள் கோரி இருக்க வேண்டுமென்றே நான் கருதுகிறேன். காரணம் நம்முடைய தமிழ் நாட்டின் நிதி அறிக்கையிலே கொண்டு வந்திருப்பதில் கல்விக்காக கூடுதலாக நாம் ஒதுக்கி இருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி இருந்தாலும், இன்றைய நிலையில் பள்ளிக் கூடங்களில் பள்ளிக்கட்டிடங்கள் நல்ல முறையில் இல்லை மாணவர்கள் மரத்தடியில் உட்கார்ந்து படிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது.